**செய்தி வெளியீடு எண் : 1955** **நாள் : 07.11.2022**

**செய்தி வெளியீடு**

***திருவள்ளூர் மாவட்டம், சென்னை – திருத்தணி - ரேணிகுண்டா சாலையில், அமைந்துள்ள இருவழி இரயில்வே மேம்பாலத்திற்குப் பதிலாக, ஆறு வழி இரயில்வே மேம்பாலமாக கட்டப்படவுள்ள பகுதியினை, இன்று (7.11.2022)*** *மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள்* ***ஆய்வு.***

---

*சென்னை – திருத்தணி - ரேணிகுண்டா சாலையில், கி.மீ.75/6இல் இருவழி இரயில்வே மேம்பாலமாக உள்ளது. இதனை ஆறுவழி இரயில்வே மேம்பாலமாக கட்டுவதற்கு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*

*திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்காவில் அமைந்துள்ள, இந்த இரயில்வே கடவு எண்.64 சென்னை - அரக்கோணம் சாலை சென்னை கோட்டத்திற்கு உட்பட்டதாகும். விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில், தற்போதைய மேம்பாலத்தின் அருகில், ரூ.13.5 கோடி மதிப்பீட்டில், ஆறுவழி மேம்பாலம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*

*இந்த மேம்பாலம் கட்டுவதற்கு உத்தேசமாக 1150 சதுர மீட்டர் நில எடுப்பு செய்யப்பட வேண்டும்.*
*இரயில்வே மேம்பாலம் பண ஒப்பளிப்பு (Deposit) அடிப்படையில், இரயில்வே பணிகளின்கீழ், தமிழக அரசுடன் இணைந்து, தற்போதைய இருவழி மேம்பாலத்தை ஆறுவழியாக மேம்படுத்தப்பட வேண்டும்.*

*நிலஎடுப்பு மற்றும் வடிவமைப்பு முழுமைபெற்றவுடன் நிர்வாக ஒப்புதல் பெற்று, இப்பாலப்பணிகள் இரயில்வே துறையும், அணுகுசாலை நெடுஞ்சாலைத்துறையும் முறையாக ஒப்பந்தம் கோரப்பட்டு, மேம்பாலப் பணிகள் துவக்கப்படும் என்று மாண்புமிகு.பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்கள்.*

*இந்த ஆய்வின்போது, திரு.ஜோசப் சாமுவேல் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர், திரு.ஆர்.சந்திரசேகர், தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, திரு.சேகர்,*

தலைமைப் பொறியாளர் சென்னை மெட்ரோ மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.




**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in